அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 05 /2017
தேதி : 13.1.2017

# பொங்கல் திருநாள் வாழ்த்து

தை திருநாள், தமிழர் திருநாள், உழவர் திருநாள், தமிழின் பெருமையினை உலகிற்கு பறைசாற்றிய திருவள்ளுவர் தினம், தமிழரின் காணும் திருநாள் இப்படி எந்த வகையில் குறிப்பிட்டாலும், இது தமிழர் அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும் பொங்கல் திருநாள்.

தமிழக விவசாயிகளின் நிலை, வறட்சி ஆண்டு, ஜல்லிக்கட்டு தடை என சோதனைகள் பல நமது பொங்கல் திருநாளின் கொண்டாட்டத்தினையும் மகிழ்ச்சியையும் குறைத்திருக்கின்றன. எனினும் இந்த தைத்திருநாளில் ஒரு சூளுரைப்போம் தமிழகம் இனிமேலும் வறட்சி மாநிலமாக நீடிக்க விடமாட்டோம் என்று.

இயற்கையே பொய்த்துப்போனாலும், நம்மிடம் இருக்கும் நீர்நிலைகளை மேம்படுத்தி, கட்டமைப்புகளின் தரத்தை மேம்படுத்தி, எந்த காலத்திலும் தமிழகத்தின் நீர்வளம் குறையாமல் இருப்பதற்கு வழி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கங்களை எடுக்க செய்வோம்.

சென்ற வருடம் நீரால் அழிவு, இந்த வருடம் நீரில்லாமல் அழிவு என்ற பரிதாபகரமான நிலையை மாற்றுவோம். ஆக்கபூர்வமான போராட்டங்களில் மூலம் தமிழகத்தின் உரிமையை நிலை நாட்டுவோம்.

அடுத்த ஆண்டு ஜல்லிக்கட்டு என்ற வீர விளையாட்டினை, பாரம்பர்ய கலையினை, எம் தந்தை தாய் போற்றிய பொக்கிஷத்தினை அந்நியர்கள் யாரும் தடுக்க முடியாது என்று நீதி துறை மூலமாகவும் போராடி வெற்றிக் காண்போம்.

2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஜல்லிக்கட்டு விளையாட்டினை மாவட்டங்கள் தோறும் போட்டி வைத்து நடத்தி அதன் இறுதி போட்டியினை, தைத்திருநாளில் பல்வேறு விழாக்களுடன் என் சார்பிலும் சமத்துவ மக்கள் கட்சி சார்பிலும் நடத்துவதற்கு, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, மிக மிக சிறப்பாக நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுப்போம் என்று நான் இந்த பொங்கல் அன்று உறுதி எடுக்கிறேன்.

தமிழரின் அடையாளத்தை அழிக்க அல்லது குறைக்க முற்படும் அனைத்து செயல்களுக்கும் சரியான பதில் கொடுக்கும் வகையில், ஒன்று சேர்வோம், ஒற்றுமை காப்போம்.

முழுமையான பொங்கலை அடுத்த ஆண்டு எதிர்நோக்கினாலும், அனைவருக்கும் குடும்பத்தினருடன் மகிழ்வுடன் கொண்டாடும் வகையில் இந்த பொங்கல் அமைய வாழ்த்துக்கள்.

விரைவில் தமிழன் வெல்வான். தமிழினம் பெருமை கொள்ளும்.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்